**பொலிஸ் வெகுமதி நிதியம் - 2013**

---

பொலிஸ் வெகுமதி நிதியத்தின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்று, உரிமை மூலதன மாற்றங்கள் கூற்று மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்று என்பவற்றினை உள்ளடக்கிய 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு, பொலிஸ் கட்டளைச் சட்டத்தின் 73(4) (அத்தியாயம் 65) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. இந் நிதிக்கூற்றுக்கள் மீதான என்னுடைய கருத்துரைகள் மற்றும் அவதானிப்புரைகள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்திற்கான பொறுப்பு**

---

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்கள் மற்றும் 2013 ஒக்தோபர் 02 ஆந் திகதிய 03/2013 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை என்பவற்றிற்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது. எவ்வாறாயினும், நிதிக்கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களிற்கு இணங்க கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்த நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க பிரதான கணக்காய்வு நிறுவனத்தின் சர்வதேச சர்வதேச நியமங்களுக்கு (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 – 1810) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுக் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளன. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்தில்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக் கூற்றுக்கள்

## 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர, 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பொலிஸ் வெகுமதி நிதியத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டின் அதன் நிதிசார் செயலாற்றல் மற்றும் காசுப் பாய்ச்சல் என்பவற்றினை இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு தத்துவங்களுக்கமைய நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் வெளிப்படுத்துகின்றதென்பது எனது அபிப்பிராயமாகும்.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

நீதி மன்ற தண்டப்பணங்கள் தொடர்பான கொடுக்கல் வாங்கல்கள் காசு அடிப்படையில் கணக்கிடப்பட்டிருந்ததுடன் இது நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2 இணக்கம் செய்யப்படாத வித்தியாசங்கள்

மீளாய்வாண்டின் போது செய்யப்பட்ட வெகுமதி கொடுப்பனவுகள் தொடர்பில் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட தொகைக்கும் பொலிஸ் தலைமை அலுவலகத்தின் குற்றத்தடுப்புப் பிரிவால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகளிற்கும் இடையில் ரூபா 30,852,746 ஆன வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| கணக்கு விடயங்கள் | நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் தொகை | குற்றத்தடுப்புப் பிரிவின் அறிக்கைகளின் பிரகாரம் | வித்தியாசம் |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| பொது மற்றும் விசேட கட்டுநிதியின் கீழான வெகுமதிக் கொடுப்பனவு | 422,775,671 | 394,821,675 | 27,953,996 |
| விசேட வெகுமதிக் கொடுப்பனவுகள் | 12,090,500 | 9,191,750 | 2,898,750 |
| மொத்தம் | 434,866,171 | 404,013,425 | 30,852,746 |

இவ்வித்தியாசங்களிற்கான காரணங்கள் கண்டுபிடிக்கப்பட்டு கணக்குகளின் பிரகாரம் சீராக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 தொங்கல் கணக்கு

2003 ஆம் ஆண்டிலிருந்து தொங்கல் கணக்கில் இருந்த ரூபா 48,929 ஆக செலவு மீதி இந்த மீதியை சீராக்குவதற்கு அவசியமான நடவடிக்கை எடுக்காமல் திரட்டு நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது.

### 2.2.4 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) குற்றப் புலனாய்வுப் பிரிவு பொலிஸ் ஆரம்ப நிதிக்கு வழங்கப்பட்ட முற்பணங்கள் ரூபா 2,000,000 மற்றும் ரூபா 8,000 என்பன 14 வருடங்களிற்கு மேலாக நிலுவையாக இருக்கிறது. இம்முற்பணங்களை தீர்ப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2013 திசெம்பர் 31 இல் ஒரு வருடங்களிற்கு மேலாக நீதி மன்ற தண்டப் பணம் ரூபா 1,371,166 நிலுவையாக உள்ளது. இது 2014 ஏப்ரல் 30 வரை அறவிடப்படவில்லை.

### 2.2.5 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 64,592,411 தொகையான செலுத்த வேண்டிய விசேட வெகுமதிகள் தொடர்பான பட்டோலை, காலப்பகுப்பாய்வு போன்ற அத்தகைய சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.6 சுற்றறிக்கை ஏற்பாடுகளுடன் இணங்காமை

2006 இன் திசெம்பர- 22 ஆந் திகதிய பிஎவ்/423 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான பாதீடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி, மீளாய்வாண்டிற்கான நிதியத்தின் செயற்பாடுகள் முன்னைய ஆண்டிற்கான ரூபா 369,271,321 ஆன நேரொத்த மிகைகளுடன் ஒப்பிடும் போது ரூபா 761,468,308 ஆன மிகையில் விளைவித்திருந்தது. இதன்படி, மீளாய்வாண்டின் போதான நிதிசார் விளைவுகளின் முன்னேற்றம் ரூபா 392,196,987 ஆல் அதிகரித்திருந்தது. இது பகுப்பாய்வு செய்யப்பட்டு கீழே தரப்பட்டுள்ளது.

| | 2013 | 2012 | நடைமுறை ஆண்டிற்கான நிதிசார் விளைவுகளிற்கான பாதிப்பு சாதகமானது/ (பாதகமானது |
|---|---|---|---|
| **வருமானம்** | **ரூபா** | **ரூபா** | **ரூபா** |
| நீதி மன்ற தண்டப்பணங்கள் | 674,698,010 | 684,654,390 | (9,956,380) |
| வாகன நெரிசல் தண்டப்பணம் | 77,457,590 | 26,876,352 | 50,581,238 |
| பயங்கரவாத புலனாய்வு பிரிவு | 13,004,477 | - | 13,004,477 |
| முதலீடுகள் மீதான வருமானம் | 433,474,357 | 278,856,951 | 154,617,706 |
| ஏனைய வருமானம் | - | 1,000 | (1,000) |

| | | | |
|---|---|---|---|
| **மொத்த வருமானம்** | **1,198,634,734** | **990,388,693** | **208,246,041** |
| **கழி: செலவினம்** | | | |
| வெகுமதிகள் மற்றும் பொழுது போக்கு நடவடிக்கைகள் | (436,966,226) | (620,592,867) | 183,626,641 |
| நிர்வாகச் செலவினம் | (200,200) | (199,050) | (1,150) |
| ஏனைய செலவினம் | - | (325,455) | 325,455 |
| | ---------------------- | --------------------- | ------------------- |
| **நிதிசார் விளைவுகளில் முன்னேற்றம்** | **761,468,308** | **369,271,321** | **392,196,987** |
| | ---------------------- | -------------------- | --------------------- |

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

**வெகுமதிக் கொடுப்பனவு**

பொலிஸ் வெகுமதி நிதியம் முன்னைய ஆண்டில் 396,287 பொலிஸ் உத்தியோகத்தர்களிற்கு செலுத்தப்பட்ட ரூபா 554.4 மில்லியனுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் போது 275,076 பொலிஸ் உத்தியோகத்தர்களிற்கு ரூபா 394.8 மில்லியன் தொகையானவெகுமதிகள் செலுத்தப்பட்டிருந்தது. மேலும், முன்னைய ஆண்டில் 1,232 பொலிஸ் உத்தியோகத்தர்களிற்கு செலுத்தப்பட்ட ரூபா 29.9 மில்லியனுடன் ஒப்பிடும் போது தொடர்புபட்ட குற்றத்தடுப்பினருக்கு செய்யப்பட்ட பங்களிப்புகள் தொடர்பில் மீளாய்வாண்டின் போது 262 பொலிஸ் உத்தியோகத்தர்கள் மற்றும் 18 சிவில் நபர்கள் என்போருக்கு ரூபா 9.2 மில்லியன் கூட்டுமொத்தத் தொகையான விசேட வெகுமதிகள் செலுத்தப்பட்டிருந்தது.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானித்த குறைபாடுகள் அவ்வப்போது பொலிஸ் கண்காணிப்பாளர் நாகயகத்தின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருந்தன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) நீதி மன்ற தண்டப்பணங்களின் சேகரிப்பு
(ஆ) நீதி மன்ற தண்டப்பணங்களின் கணக்கீடு
(இ) வெகுமதி கொடுப்பனவுகள் மீதான கட்டுப்பாடு